ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021 ஒகத்து 13

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2021 யூன்

## பொதுநோக்கு

2021 யூனில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ந்து நான்காவது மாதமாக விரிவடைந்து காணப்படுகிறது. 2021 யூனில் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும் 2020 யூனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்பட்டன. ஆண்டின் முதலரைப்பகுதியைப் பரிசீலனையில் கொள்கையில் ஏற்றுமதிகள் ஆரோக்கியமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த போதும் இறக்குமதிச் செலவினம் உயர்ந்த வேகத்தில் அதிகரித்தது. 2021 யூனில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டன. நிதியியல் கணக்கில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகிய இரண்டிலும் வெளிநாட்டு முதலீடு இம்மாத காலப்பகுதியில் சிறிதளவு தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தது. இலங்கை ரூபா 2021 யூனில் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்பட்டது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | யூன் 2020 ஐ.அ.டொ.மில் | யூன் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-யூன் 2020 ஐ.அ.டொ.மில் | சன-யூன் 2021 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 894 | 1,007 | 12.6 | 4,413 | 5,699 | 29.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,055 | 1,659 | 57.2 | 7,675 | 10,015 | 30.5 |
| வர்த்தக மீதி | -161 | -652 | | -3,262 | -4,316 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | - | 2(இ) | - | 682(ஆ) | 23(இ) | -96.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 572 | 478 | -16.4 | 2,980 | 3,324 | 11.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -46 | -6 | | -111 | -125 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 121 | 175 | | 1,213 | 1,174 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் (மொத்தம்) | 3 | 0.1 | | 90 | 14 | |
| நீண்ட காலக் கடன்கள் (மொத்தம்) | 118 | 175 | | 1,124 | 1,160 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (மொத்தம்) (உ) | | | | 188 | 198 | |
| திரண்ட நிலுவை | | | | -760 | -1,261 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2021 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான தரவுகள் கிடைக்கப்பெறுவதுடன் முதலீட்டுச் சபை மூலம் பதிவுசெய்யப்பட்டவாறான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

**வர்த்தக மீதி:** 2021 யூனில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 161 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 652 மில்லியனிற்கு விரிவடைந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் ஒன்றுசேர்ந்த பற்றாக்குறையும் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,262 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,316 மில்லியனுக்கு விரிவடைந்ததுடன் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் இது ஐ.அ.டொலர் 3,597 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. இப்பெறுபேற்றிற்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1 இல் காட்டப்பட்டுள்ளன.

**வர்த்தக மாற்று விகிதம்:** இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற வர்த்தக மாற்று விகிதம் 2020 யூனுடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் 16.7 சதவீதத்தினால் தேய்வடைந்தமைக்கு, 2020 யூனுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்வாகவிருந்தமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2021 சனவரி – யூன் காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்)**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2020 – 2021)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2020-2021)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**[1]

**ஒட்டுமொத்த ஏற்றுமதிகள்: 2021 யூனில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,007 மில்லியனுக்கு 12.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.** 2021 சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,413 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5,699 மில்லியன்களாக விளங்கின. 2019இன் தொடர்பான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 5,999 மில்லியனை பதிவுசெய்திருந்தது. ஏற்றுமதிகள் 2021 மேயினைவிட 2021 யூனில் 12.9 சதவீதத்தினால் மேம்பட்டன.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்:** பெரும்பாலான வகைகளின் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலான அதிகரிப்புடன். 2021 யூனில் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 யூனுடன் ஒப்பிடுகையில் 16.6 சதவீதத்தினால் அதிகரித்தன. இறப்பர் உற்பத்திகள் (டயர்கள் மற்றும் கையுறைகள்), பெற்றோலிய உற்பத்திகள், பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள் (அனைத்துத் துணை வகைகள்), புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், மற்றும் அடிப்படை உலோகங்கள் மற்றும் அவற்றின் பொருட்கள் என்பன தொடர்பில் கணிசமான அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நிரம்பல் செய்யப்பட்ட அளவுகளில் ஏற்பட்ட ஓரளவு முன்னேற்றங்களுடன் சேர்ந்து நீர்கல எரிபொருளின் அலகுப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். தற்பொழுது காணப்படுகின்ற பெருந்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளுக்கு மத்தியிலும் முக்கிய ஏற்றுமதிப் பிரிவுகள் மாதத்திற்கு மாத அடிப்படையில் அதிகரித்த வருவாய்களை பதிவுசெய்திருக்கின்றன. 2021 சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,408 மில்லியன்களாக விளங்கி 2020இன் இதே காலப்பகுதியின் ஏற்றுமதிகளைவிட 31.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டின.

**வேளாண்மை ஏற்றுமதிகள்:** 2021 யூனில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தான மொத்த வருவாய்கள் 2020 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஏறத்தாழ அதே மட்டங்களைப் பதிவுசெய்தன. ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட மேம்பாட்டின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. மேலும், தெங்கு (உள்ளீடு மற்றும் உள்ளீடு அல்லா உற்பத்திகள் இரண்டும்) வாசனைத்திரவியங்கள் (மிளகு மற்றும் கராம்பு போன்றவை) மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. மாறாக, கடலுணவு, சிறு வேளாண்மை உற்பத்திகள் (பழ வர்க்கங்கள், பாக்கு, வெற்றிலை போன்றவை) மற்றும் காய்கறிகள் (உடன், குளிரூட்டப்பட்டவை, உலர்த்தப்பட்டவை, பதனிடப்பட்டவை போன்றவை) என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. 2021இன் முதலரைப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,259 மில்லியன்களாக விளங்கி 2020இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 21.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

[1] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்:** 2020 யூனுடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உயர்வாகக் காணப்பட்டமைக்கு மண் மற்றும் கற்கள் அதேபோன்று இரும்புத் தாதுக்கள், கழிவு உருக்குகள் மற்றும் சாம்பல் கட்டி என்பனவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாக அமைந்தன. 2021 சனவரியிலிருந்து யூன் வரையான காலப்பகுதியில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 25 மில்லியன்களாக விளங்கின.

**ஏற்றுமதிச் சுட்டெண்கள்:** ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் 2021 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 8.9 சதவீதத்தினாலும் 3.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இவை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதி அளவு மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட இணைந்த தாக்கம் காரணமாக அதிகரித்தமையினை எடுத்துக்காட்டுகின்றன.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **661.3** | **771.4** | **16.6** | **3,357.1** | **4,407.7** | **31.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 41.7 | 41.7 | 0.0 | 197.8 | 248.0 | 25.4 |
| விலங்குத்தீன் | 11.3 | 8.7 | -22.9 | 49.2 | 58.9 | 19.6 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 403.7 | 415.5 | 2.9 | 1,943.9 | 2,487.4 | 28.0 |
| இதில் ஆடைகள் | 323.0 | 376.6 | 16.6 | 1,734.2 | 2,267.5 | 30.8 |
| புடவைகள் | 20.8 | 30.0 | 44.2 | 105.9 | 156.6 | 47.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 59.8 | 8.8 | -85.3 | 103.8 | 63.3 | -39.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 66.0 | 92.9 | 40.7 | 335.7 | 499.7 | 48.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 11.2 | 21.2 | 89.5 | 72.7 | 132.1 | 81.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 30.2 | 45.2 | 49.8 | 146.5 | 242.1 | 65.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.7 | 12.8 | 66.8 | 30.9 | 54.8 | 77.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 16.7 | 41.3 | 147.3 | 219.5 | 196.7 | -10.4 |
| இரசாயன உற்பத்திகள் | 16.0 | 21.8 | 35.9 | 75.3 | 109.6 | 45.5 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 8.0 | 11.3 | 40.2 | 44.4 | 60.6 | 36.5 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 1.9 | 2.2 | 11.3 | 15.1 | 26.3 | 74.4 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 5.9 | 4.7 | -20.1 | 26.1 | 22.5 | -13.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.9 | 7.6 | 11.4 | 26.7 | 37.5 | 40.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 9.6 | 17.8 | 84.9 | 55.5 | 73.2 | 31.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1.4 | 3.3 | 134.4 | 9.1 | 17.6 | 94.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 23.2 | 23.4 | 1.1 | 108.7 | 140.7 | 29.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **229.1** | **230.3** | **0.5** | **1,039.0** | **1,258.9** | **21.2** |
| தேயிலை | 114.9 | 123.9 | 7.8 | 571.7 | 650.5 | 13.8 |
| இறப்பர் | 2.9 | 2.6 | -8.5 | 13.5 | 20.3 | 50.7 |
| தேங்காய் | 34.2 | 38.6 | 12.7 | 146.8 | 196.2 | 33.7 |
| வாசனைத்திரவியங்கள் | 31.5 | 35.5 | 12.8 | 113.8 | 196.8 | 72.9 |
| காய்கறிகள் | 3.9 | 1.9 | -51.8 | 13.8 | 12.2 | -12.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.3 | 3.1 | 133.4 | 9.5 | 16.2 | 69.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 16.0 | 8.9 | -44.6 | 70.7 | 60.4 | -14.6 |
| கடலுணவு | 24.3 | 15.8 | -35.1 | 99.1 | 106.4 | 7.3 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **1.6** | **4.4** | **172.3** | **9.7** | **24.9** | **155.6** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.1** | **0.9** | **-54.8** | **7.0** | **7.5** | **8.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **894.1** | **1,007.0** | **12.6** | **4,412.8** | **5,699.0** | **29.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[2]

**ஒட்டுமொத்த இறக்குமதிகள்: 2020 யூனில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,055 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,659 மில்லியனுக்கு 57.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் அதாவது நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றில் அதிகரித்த போதும் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவாக இருந்தமைக்கு 2021 யூன் காலப்பகுதியில் குறைந்தளவு இறக்குமதி அளவுகளே காரணமாகும். ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2021இன் முதலரைப்பகுதியில் மொத்த இறக்குமதிச் செலவினம் 2020இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 7,675 மில்லியனுடனும் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 9,596 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 10,015 மில்லியனாக விளங்கியது.

**நுகர்வுப் பொருட்கள்:** உணவு மற்றும் குடிபானங்கள், உணவல்லா நுகர்வுப் பொருள் வகைகள் ஆகிய இரண்டினதும் இறக்குமதி மீதான செலவினம் ஓராண்டிற்கு முன்னைய அளவுகளுடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் கணிசமாக அதிகரித்தன. கடலுணவு தவிர்ந்த மற்றைய அனைத்து வகைகளிலும் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலான அதிகரிப்புக் காரணமாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் 61.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 165.0 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், மொத்த உணவு மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பு பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக பால்மா மற்றும் வெண்ணெய் கட்டி மற்றும் பட்டர்) மற்றும் எண்ணெய் மற்றும் கொழும்பு (முக்கியமாக தேங்காய் எண்ணெய் அத்துடன் ஏனைய வகை எண்ணெய்) என்பனவற்றிலிருந்து கிடைந்தன. உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் 47.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 217.2 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (முக்கியமாக நோய்த்தடுப்பு மருந்து), வீட்டு உபயோகச் சாதனங்கள் (தொலைக்காட்சிப் பெட்டி, சோறு சமைக்கும் சாதனம், மின்விசிறிகள், குளிர்சாதனப்பெட்டிகள் போன்றவை), செல்லிடத்தொலைபேசிகள், இறப்பர் டயர்கள் மற்றும் ரியூப்புக்கள் போன்றன முக்கியமாகப் பங்களித்தன. 2021இன் முதலரைப்பகுதியில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான மொத்தச் செலவினம் ஐ.அ.டொலர் 1,912 மில்லியன்களாக அமைந்து 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

**இடைநிலைப் பொருட்கள்:** 2021 யூனில் எரிபொருள் மீதான செலவினம் 40.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 யூனினைவிட 48.5 சதவீதத்தினால் அதிகரித்தது. எரிபொருள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு போதுமான இருப்புக்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதனைப் பரிசீலனையில் கொண்டு மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படாமையும் பெற்றோலியத்தின் ஏனைய வகைகள் குறைந்தளவு இறக்குமதி செய்யப்பட்டமையுமே காரணங்களாக அமைந்தன. வளமாக்கி, கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த பெரும்பாலும் அனைத்து வகை இடைநிலைப் பொருட்களினதும் செலவினம் அதிகரித்தமையானது நாட்டின் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளையும் அதேபோன்று உலக சந்தையில் அதிகரித்த பண்ட விலைகளையும் பிரதிபலித்தன. 2021இன் முதலரைப்பகுதியில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான மொத்தச் செலவினம் ஐ.அ.டொலர்

[2] நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இற்கிணங்க வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளன.

5,950 மில்லியன்களாக விளங்கி 2020இன் இதே காலப்பகுதியிலிருந்தான செலவினத்தினைவிட 42.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை காட்டியது.

**முதலீட்டுப் பொருட்கள்:** 2021 யூனில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020இன் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் மூன்று வகை முதலீட்டுப் பொருட்களான பொறி மற்றும் கருவிகள், கட்டட மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றின் கீழே பெரும்பாலும் ஒவ்வொரு துணை வகைகளிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களின் காரணமாக 81.1 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான மொத்தச் செலவினம் ஐ.அ.டொலர் 2,147 மில்லியன்களாக விளங்கி 2020இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 25.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

**இறக்குமதிச் சுட்டெண்கள்:** 2021 யூனில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 26.7 சதவீதத்தினாலும் 24.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இது இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் உயர்ந்த இறக்குமதி அளவு மற்றும் விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கத்தின் காரணமாக அமைந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **249.1** | **382.2** | **53.4** | **1,782.1** | **1,912.3** | **7.3** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 101.9 | 165.0 | 61.9 | 787.3 | 914.9 | 16.2 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.0 | 3.6 | 255.1 | 16.8 | 19.6 | 17.0 |
| பால் உற்பத்திகள் | 21.0 | 45.8 | 118.1 | 181.1 | 184.4 | 1.9 |
| காய்கறிகள் | 26.5 | 39.6 | 49.7 | 202.3 | 211.1 | 4.3 |
| கடலுணவு | 22.6 | 9.6 | -57.6 | 107.5 | 52.7 | -51.0 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 12.9 | 23.8 | 84.4 | 116.4 | 206.7 | 77.6 |
| வாசனைத்திரவியங்கள் | 7.9 | 8.9 | 12.1 | 67.7 | 68.4 | 1.1 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 10.0 | 33.7 | 237.1 | 95.6 | 171.9 | 79.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 147.1 | 217.2 | 47.6 | 994.8 | 997.4 | 0.3 |
| தனியாள் ஊர்திகள் | 9.2 | 0.4 | -95.9 | 273.4 | 4.4 | -98.4 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 60.8 | 94.8 | 55.9 | 274.7 | 328.2 | 19.5 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 6.3 | 26.3 | 320.0 | 83.0 | 139.3 | 67.8 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 17.5 | 15.0 | -14.3 | 111.0 | 105.3 | -5.1 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 29.4 | 41.5 | 41.4 | 101.4 | 205.3 | 102.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 13.3 | 12.7 | -4.5 | 70.5 | 77.7 | 10.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 10.7 | 26.5 | 146.9 | 80.9 | 137.3 | 69.6 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **564.8** | **839.0** | **48.5** | **4,166.8** | **5,950.1** | **42.8** |
| எரிபொருள் | 110.4 | 66.3 | -40.0 | 1,243.4 | 1,787.2 | 43.7 |
| இதில் மசகெண்ணெய் | 26.8 | 0.0 | -100.0 | 251.4 | 317.0 | 26.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 83.6 | 66.2 | -20.8 | 865.6 | 1,343.5 | 55.2 |
| நிலக்கரி | 0.0 | 0.1 | 176.4 | 126.4 | 126.7 | 0.2 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 6.9 | 10.5 | 52.6 | 39.2 | 62.2 | 58.8 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 175.7 | 276.8 | 57.5 | 1,065.6 | 1,451.1 | 36.2 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 26.0 | 52.0 | 100.3 | 175.2 | 241.4 | 37.8 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 15.8 | 27.9 | 76.7 | 101.8 | 136.9 | 34.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 27.8 | 43.6 | 56.6 | 156.5 | 184.6 | 17.9 |
| அடிப்படை உலோகங்கள் | 13.6 | 57.5 | 322.8 | 171.2 | 354.5 | 107.0 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 28.9 | 80.9 | 179.9 | 228.3 | 403.7 | 76.8 |
| இரசாயன உற்பத்திகள் | 62.9 | 101.9 | 61.9 | 378.9 | 567.4 | 49.7 |
| வளமாக்கி | 22.2 | 2.2 | -90.0 | 107.0 | 97.5 | -8.9 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 13.7 | 37.9 | 176.6 | 110.2 | 199.2 | 80.8 |
| கனிம உற்பத்திகள் | 18.4 | 14.7 | -20.3 | 78.5 | 75.0 | -4.4 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 42.4 | 66.8 | 57.4 | 310.9 | 389.4 | 25.2 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **240.9** | **436.2** | **81.1** | **1,715.2** | **2,147.4** | **25.2** |
| பொறி மற்றும் கருவிகள் | 146.4 | 270.3 | 84.6 | 990.0 | 1,366.5 | 38.0 |
| கட்டடப் பொருட்கள் | 77.9 | 118.7 | 52.3 | 495.2 | 601.6 | 21.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 16.2 | 46.6 | 187.3 | 228.5 | 177.6 | -22.3 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.6 | 95.8 | 1.5 | 1.7 | 12.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.7** | **1.8** | **177.1** | **10.5** | **4.9** | **-53.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,055.5** | **1,659.2** | **57.2** | **7,674.6** | **10,014.7** | **30.5** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **945.0** | **1,592.9** | **68.6** | **6,431.2** | **8,227.6** | **27.9** |

(அ) தற்காலிகமானவை

(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## வர்த்தகத்தின் போக்கு

இலங்கை ஐக்கிய அமெரிக்காவுடனும் ஐரோப்பிய நாடுகளுடனும் பாரிய வர்த்தக மிகைகளைப் பேணி வருகிறது. இந்நாடுகள் குறிப்பாக, புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான இலங்கையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக காணப்படுகின்றன. இலங்கை முக்கிய இறக்குமதி மூலங்களாக விளங்கும் ஆசிய நாடுகளுடன் பாரிய வர்த்தகப் பற்றாக்குறையினை பேணி வருகிறது.

**வரைபடம் 8: இருபுடை வர்த்தக நிலுவைகள் 2021 சனவரி – யூன்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

**2020 யூனுடன் ஒப்பிடுகையில் 2021 யூனில் தொழிலாளர் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தன.** இதன்படி, தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 478 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 16.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், 2021 யூனில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 460 மில்லியனிலும் பார்க்க உயர்வாகவே காணப்பட்டது. மேலும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 3,324 மில்லியனுக்கு 11.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தன.

**சுற்றுலாத்துறை 2021 யூனில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான வருகைகளை கொண்டிருந்தது.** 2021 யூனில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2021 மேயின் 1,497 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 1,614 ஆக பதிவுசெய்யப்பட்டது. 2021இன் முதலரைப்பகுதியில் 2020இன் தொடர்பான காலப்பகுதியின் 507,311 வருகைகளுடன் ஒப்பிடுகையில் மொத்தமாக 16,908 சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் பதிவுசெய்யப்பட்டன. 2021 யூனில் சுற்றுலாப் பயணிகளுக்கான முக்கிய மூல நாடுகளாக பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி என்பன விளங்கின. சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021 யூனில் ஐ.அ.டொலர் 2 மில்லியனாக விளங்கின. 2021இன் முதலரைப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2020இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 23 மில்லியனாக மதிப்பிடப்பட்டது.

**வரைபடம் 9: மாதாந்த சுற்றுலாப்பயணிகள் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**வரைபடம் 10: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,
உரிமம்பெற்ற வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

**2021 யூனில் அரச பிணையங்கள் சந்தையில் சிறிதளவான தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள் பதிவு செய்யப்பட்டன.** 2021இன் முதலரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 24 மில்லியனாக விளங்கிய வேளையில் வெளிநின்ற வெளிப்படுத்துகை 2021 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 12 மில்லியனாக குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, 2021 யூனிலும் 2021 முதலரைப்பகுதியிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை முறையே ஐ.அ.டொலர் 6 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 125 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

**2021 யூன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனாக விளங்கி 2.6 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாக விளங்கின.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்படுகின்றது. மேலே அறிக்கையிடப்பட்ட ஒதுக்குகளின்

மட்டமானது சீன மக்கள் வங்கிக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையிலான சீன யுவான் 10 பில்லியன் பெறுமதியான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) மூன்று வருட இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையினை உள்ளடக்கவில்லை.

**வரைபடம் 11: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

**மாத இறுதியில் ஓரளவு மேல்நோக்கிய அசைவுகள் காணப்பட்டமைக்கிடையிலும், 2021 யூன் மாத காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான சந்தையில் சராசரி நிறையேற்றப்பட்ட உடன் செலாவணி வீதம் பெருமளவிற்கு உறுதியானதாகக் காணப்பட்டது.** இதற்கமைய, இம்மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ. டொலருக்கெதிராக 0.8 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2021 ஓகத்து 13ஆம் நாள் வரையான இவ்வாண்டுப்பகுதியில் ரூபா, ஐ.அ.டொலருக்கெதிராக 6.8 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2021 ஓகத்து 13 வரையான இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை ரூபா, யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், அவுஸ்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்தது. மத்திய வங்கி கடன்படாத வளங்களினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக 2021 யூன் காலப்பகுதியிலும் அதேபோல் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியிலும் தேறிய அடிப்படையில் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைத் தொடர்ந்தும் ஈர்த்துக்கொண்டது.

**வரைபடம் 12: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**







**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2019 | 2020 | 2021 (ஓகத்து 13 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +0.6% | -2.6% | -6.8% |
| யூரோ | +2.6% | -11.2% | -2.3% |
| பவுண் ஸ்ரேலிங் | -2.8% | -6.2% | -7.9% |
| யப்பானிய யென் | -1.0% | -7.5% | -0.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | +1.3% | -11.4% | -2.1% |
| இந்தியன் ரூபா | +2.6% | 0.0% | -5.4% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு I:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள்

| வகை | யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **235.4** | **226.8** | **-3.6** | **1,078.2** | **1,278.9** | **18.6** |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 27.1 | 18.0 | **-33.7** | 111.9 | 123.1 | **10.0** |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 4.8 | 4.9 | **2.3** | 32.4 | 31.9 | **-1.6** |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 41.5 | 34.5 | **-16.9** | 177.1 | 206.8 | **16.8** |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, சாவனைத்திரவியங்களின் தயாரிப்புக்கள் அவற்றில் | 143.5 | 156.3 | **8.9** | 671.6 | 830.3 | **23.6** |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **10.7** | **13.7** | **27.1** | **47.5** | **64.9** | **36.6** |
| 11 குடிபானங்கள் | 3.3 | 2.6 | **-22.4** | 15.9 | 14.7 | **-7.3** |
| 12. புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 7.4 | 11.1 | **49.1** | 31.6 | 50.2 | **58.6** |
| **2. மசகுப் பொருட்கள், சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை எரிபொருள் தவிர்ந்தவை** | **34.3** | **36.2** | **5.3** | **154.7** | **209.3** | **35.3** |
| 23 மசகு இறப்பர் | 3.0 | 2.7 | **-9.3** | 13.8 | 20.8 | **50.0** |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 23.3 | 21.7 | **-7.1** | 93.4 | 116.9 | **25.2** |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **16.7** | **41.3** | **147.3** | **219.5** | **196.7** | **-10.4** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 12.3 | 31.6 | **157.7** | 213.0 | 177.5 | **-16.6** |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 4.4 | 9.7 | **118.5** | 6.5 | 19.1 | **194.4** |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **8.5** | **10.2** | **20.0** | **34.2** | **56.6** | **65.7** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 7.4 | 8.2 | **10.8** | 28.2 | 38.4 | **36.4** |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **20.7** | **27.5** | **32.4** | **96.7** | **139.2** | **43.9** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **147.6** | **149.4** | **1.2** | **595.4** | **793.0** | **33.2** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 43.8 | 61.5 | **40.6** | 235.5 | 321.0 | **36.3** |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட் பொருட்கள் போன்றவை வே.எ.கு | 75.8 | 37.5 | **-50.6** | 193.7 | 208.8 | **7.8** |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 14.0 | 26.5 | **90.2** | 86.7 | 159.6 | **84.1** |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **36.7** | **56.8** | **54.7** | **171.7** | **289.4** | **68.6** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 23.1 | 29.5 | **27.6** | 104.1 | 155.8 | **49.6** |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **383.4** | **445.2** | **16.1** | **2,015.0** | **2,670.9** | **32.6** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 351.6 | 411.6 | **17.1** | 1,852.4 | 2,461.8 | **32.9** |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.0** | **0.0** | **_** | **0.0** | **0.3** | **_** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **894.1** | **1,007.0** | **12.6** | **4,412.8** | **5,699.0** | **29.1** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறிப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு II:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம்

| வகை | யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ. மில்) | சன-யூன் 2021 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **146.7** | **221.8** | **51.2** | **1,056.8** | **1,190.6** | **12.7** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 21.0 | 45.8 | **118.2** | 181.3 | 184.7 | **1.9** |
| 03. மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 22.7 | 9.7 | **-57.3** | 108.0 | 53.2 | **-50.8** |
| 04. தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 28.6 | 46.9 | **63.8** | 172.6 | 202.6 | **17.4** |
| 05. காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 28.7 | 43.4 | **51.3** | 236.5 | 248.7 | **5.2** |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 12.9 | 23.8 | **84.4** | 116.4 | 206.7 | **77.6** |
| 07. கோப்பி, தேயிலை, கொக்கோ, சாவனைத்திரவியங்களின் தயாரிப்புக்கள் அவற்றில் | 9.6 | 11.9 | **24.0** | 85.7 | 89.3 | **4.1** |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **12.5** | **5.9** | **-52.8** | **51.9** | **37.1** | **-28.5** |
| **2. மசகுப் பொருட்கள், சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை எரிபொருள் தவிர்ந்தவை** | **29.2** | **52.8** | **80.9** | **231.7** | **286.8** | **23.8** |
| 23 மசகு இறப்பர் | 11.5 | 33.3 | **188.5** | 93.5 | 176.0 | **88.3** |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 4.9 | 2.6 | **-46.4** | 53.9 | 12.7 | **-76.4** |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **110.4** | **66.3** | **-40.0** | **1,243.4** | **1,787.2** | **43.7** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 95.8 | 43.5 | **-54.6** | 998.3 | 1,493.9 | **49.6** |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 14.6 | 22.6 | **55.1** | 118.7 | 166.6 | **40.3** |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **5.4** | **30.1** | **461.3** | **70.3** | **151.8** | **116.0** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி, கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 5.0 | 26.3 | **423.1** | 65.7 | 138.1 | **110.1** |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **170.2** | **278.3** | **63.5** | **975.7** | **1,377.8** | **41.2** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 58.1 | 90.0 | **54.9** | 258.0 | 297.3 | **15.3** |
| 56 வளமாக்கி, மற்றும் தயாரிக்கப்பட்டவை | 22.2 | 2.0 | **-90.9** | 106.9 | 97.0 | **-9.2** |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 16.0 | 59.1 | **268.3** | 149.6 | 299.6 | **100.3** |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 9.5 | 19.8 | **108.1** | 65.4 | 86.4 | **32.1** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **320.1** | **538.6** | **68.3** | **1,997.0** | **2,807.5** | **40.6** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 24.3 | 50.7 | **108.9** | 169.1 | 231.0 | **36.6** |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட் பொருட்கள் போன்றவை வே.எ.கு | 175.5 | 270.2 | **53.9** | 1,011.2 | 1,421.5 | **40.6** |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 50.1 | 47.0 | **-6.3** | 245.3 | 247.9 | **1.0** |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 24.0 | 72.5 | **202.6** | 239.8 | 428.6 | **78.7** |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **202.2** | **381.8** | **88.9** | **1,655.6** | **1,911.6** | **15.5** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 28.0 | 66.7 | **137.7** | 201.3 | 322.2 | **60.1** |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 37.0 | 56.8 | **53.6** | 235.5 | 310.5 | **31.8** |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 17.4 | 31.1 | **78.9** | 83.8 | 161.0 | **92.1** |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 42.5 | 85.7 | **101.7** | 198.5 | 406.8 | **104.9** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 34.1 | 67.0 | **96.6** | 252.8 | 359.8 | **42.3** |
| 78 வீதி ஊர்திகளி | 25.3 | 39.6 | **56.5** | 440.2 | 186.3 | **-57.7** |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **58.0** | **81.6** | **40.7** | **385.1** | **458.8** | **19.1** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 14.1 | 12.1 | **-14.8** | 94.6 | 87.3 | **-7.7** |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 14.2 | 24.7 | **74.7** | 89.1 | 112.3 | **26.0** |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.8** | **1.9** | **133.7** | **7.2** | **5.5** | **-23.4** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,055.5** | **1,659.2** | **57.2** | **7,674.6** | **10,014.7** | **30.5** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு – வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் ‘பகுதியினையும்’ முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் ‘பிரிவினையும்’ எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறிப்புக் குறிப்பு 4 இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf